# நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(24.08.2016 முதல் 28.08.2016 வரை)

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை– 612 101**

போன்: 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in Fax: 0435 2472881


===========================================================================

**தேதி:23.08.16**

## கடந்த 4 நாட்களில் நிலவிய வானிலை (19.08.2016– 22.08.2016)

| காரணிகள் | கடந்த நாட்களில் வானிலை |
|---|---|
| மழை (மி.மீ.) | 3.6 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 34 – 38 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 26 – 28 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 1 – 7 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 63 – 87 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 5 – 11 |

## அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>24.08.2016 | நாள் 2<br>25.08.2016 | நாள் 2<br>26.08.2016 | நாள் 4<br>27.08.2016 | நாள் 5<br>28.08.2016 |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 36 | 36 | 36 | 36 | 36 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 27 | 27 | 27 | 27 | 27 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 5 | 5 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 75 – 80 | 75 – 80 | 75 – 80 | 75 – 80 | 75 – 80 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 8 | 8 | 8 | 8 |
| காற்றின் திசை | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு |

24.08.2016 முதல் 28.08.2016 வரை வானம் சற்று மேகமூட்டத்துடன் காணப்படும். மழை இல்லை.

***வேளாண் அறிவுரைகள் :***

**பயிர் : நெல், உளுந்து, எள், கரும்பு மற்றும் பருத்தி**

**பருவம் : குறுவை : தண்டு உருளும் பருவம் சம்பா : நிலம் தயாரித்தல் மற்றும் விதைத்தல்.**

- சாகுபடி செய்யப்பட்டுள்ள குறுவை நெற்பயிரில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த டைக்கோபால் 500 மி.லி./ஏக்கர் அல்லது நனையும் கந்தகத்தூள் 400 கிராம்/ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

- சம்பா வயல்களில் நேரடிவிதைப்பு செய்யும் பொழுது டிராக்டர் மூலம் இயங்கும் விதைக்கும் கருவிக்கு ஏக்கருக்கு 15 கிலோ மற்றும் ஆட்கள் கொண்டு தெளிக்கும் பொழுது ஏக்கருக்கு 30 கிலோ விதை அளவும் பரிந்துரைக்கப்படுகிறது. விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.

- சம்பா நாற்றங்கால் தயார் செய்ய ஏக்கருக்கு 8 சென்ட் பாத்தியில் 400 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் கலந்து இடவேண்டும். சம்பா நாற்றங்காலில் ஒரு சென்ட்க்கு 1 கிலோ வீதம் டீ.ஏ.பி மேலுரமாக இடவேண்டும்.

- நேரடி விதைப்பு செய்த சேற்று வயல்களில் பயிர் முளைத்த 3-4 தினங்களுக்குள் பிரிடிலாக்குளோர் + சேப்னர் ஏக்கருக்கு 500 மி.லி. என்ற அளவில் தெளித்துக் களைகளைக் கட்டுப்படுத்தவும்.

.

**இயக்குநர்**